## தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மதுவரித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஒக்தோபர் 30 ஆம் திகதி மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

மதுவரித் திணைக்களத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 730.45 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 698.29 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளில் ரூபா 32.16 மில்லியன் அதாவது 4.4 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 547.95 | 547.87 | 0.08 | 0.01 |
| மூலதன | 182.50 | 150.42 | 32.08 | 17.58 |
| மொத்தம் | **730.45** | **698.29** | **32.16** | 4.40 |

### 2.2 வருமானக் கணக்கு

#### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

2014 ஆம் ஆண்டிற்கான 23 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 74,035.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமானமாக ரூபா 69,123.60 மில்லியன் கூட்டுத்தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 93.36 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு | உள்ளபடியான வருமானம் | (குறைவாக சேகரித்தல்)/ மிகையாகச் சேகரித்தல | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மதுவரி ஆணையாளர் நாயகம் | 10.02.04.01 | 74.000.00 | 69.087.99 | (4.912.01) | 93 |
| | 10.02.06.00 | 35.00 | 35.61 | 0.61 | 102 |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மதுவரித் திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 24801 | 32.00 | 25.43 | 22.00 | 25.23 | 195.00 | 129.84 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

மதுவரித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி கணக்கு மீதிகள் ரூபா 315.09 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

மதுவரித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 315.09 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்பின் பெயர் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| பொது வைப்பு | 6000/0000/00/0015/0128/000 | 31.62 |
| பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியம் | 6000/0000/00/0008/0051/000 | 24.53 |
| பரிசு நிதியம் | 6000/0000/00/0006/0060/000 | 258.94 |
| மொத்தம் | | 315.09 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மதுவரித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (iii) | ஆளணி சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | திணைக்கள ஒதுக்கீட்டுப் (அங்கீகரிக்கப்பட்ட) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (v) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 | பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான 5 வாகனங்களுக்குரிய வாகனப் பதிவுப் புத்தகங்களின் மூலப் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுவரெலியா மதுவரி நிலையத்தை நிர்மாணித்தல் தொடர்பாக 2014 ஆம் ஆண்டிற்கு முன்னுள்ள கோவை கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக கோரப்பட்டிருந்த போதிலும் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 வருமானக் கணக்குகள்**

மதுவரி ஆணையாளர் நாயகம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 2 வருமானக் குறியீடுகளுக்கு வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீடுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10-02-04-01 ஆம் வருமானக் குறியீடு – மதுவரி (மதுபானம்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் மதுவரி (மதுபானம்) வருமானமாக சேகரிப்பதற்கு ரூபா 74,071,000,000 தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமான மதிப்பீடு ரூபா 74,000,000,000 வரை திருத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 69,087,998,770 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 93 சதவீதமாக இருந்தது. அதன்படி ரூபா 4,912,001,230 இனால் எதிர்பார்த்த வருமான இலக்கை அடைவதற்கு தவறியிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 85(2)(அ) இன் படி மதிப்பீட்டை மாற்ற வேண்டியேற்படுமாயின், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அதற்கான காரணங்களுடன் அரசிறைக் கொள்கை பணிப்பாளர்

நாயகத்திற்கு அறிக்கையிட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஸ்பிரிட் உள்நாட்டில் கொள்வனவு செய்யும் போதும், இறக்குமதி செய்யும் போதும் அறவிடப்படுகின்ற நிறுத்தி வைத்தல் வரித்தொகை, அந்த ஸ்பிரிட் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்களுக்காக உரிய மதுவரி செலுத்தும் போது ஈடுசெய்வதற்கு இடமளிக்கப்படுவதுடன், ஆண்டின் இறுதியில் காணப்படுகின்ற எஞ்சிய ஸ்பிரிட் இருப்புக்குரிய நிறுத்தி வைத்தல் வரித்தொகை எதிர்வரும் ஆண்டுகளின் போது ஈடுசெய்யப்பட வேண்டிய போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ஸ்பிரிட் இருப்புக்குரிய ரூபா 511,467,525 தொகையான நிறுத்தி வைத்தல் வரித்தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) திணைக்களத்தின் வருமானப் பிரிவின் அறிக்கையின் படி மீளாய்வாண்டில் ஈடுசெய்வதற்கு இடமளிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரித்தொகை ரூபா 2,767,065,356 ஆக இருந்த போதிலும் கணக்குகள் பிரிவின் அறிக்கையின்படி அது ரூபா 2,786,844,177 ஆக அதாவது ரூபா 19,778,821 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(v) மதுபானம் ஏற்றுமதி செய்யும் போது, ஏற்றுமதி வரி மீளளிப்பு ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்தினால் ஏற்றுமதியாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சுங்க ஏற்றுமதிப் பத்திரம் மாத்திரமே அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி உள்ளபடியான ஏற்றுமதி செய்யப்பட்ட அளவை அறிந்து கொள்வதற்கான முறைமையொன்று திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,527,265,037 தொகையான நிலுவை வருமானம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,534,977,463 வரை ரூபா 7,712,426 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) 10-02-06-00 ஆம் வருமானக் குறியீடு – புகையிலை வரி

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் புகையிலை வரி வருமானமாக ரூபா 38,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அது ரூபா 35,000,000 வரை வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 35,606,823 தொகை அதாவது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 102 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) திணைக்களத்தினால் சிகரட் ஏற்றுமதி தொடர்பாக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் ஏற்றுமதி செய்யப்படுகின்ற சிகரட்டின் அளவு உள்ளபடியாக ஏற்றுமதி செய்யப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய முறைமையொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பீடி உற்பத்தியின் போது பீடி இலை இறக்குமதி செய்வதற்காக திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் பீடி இலை எவ்வளவு அளவு இறக்குமதி செய்யப்பட்டது என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைமையொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

24801 ஆம் விட இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சில் நிலவிவரும் ரூபா 2,632,985 தொகையான நிலுவைக் கடன்மீதிகள் காணப்பட்டன. அந்த நிலுவையான ரூபா 1,787,145 தொகையான கடன் மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளில் உள்ளடக்கப்பட்ட வேலை இடைநிறுத்தத்திற்கு உள்ளாகிய 10 வருடங்களை விஞ்சிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 204,978 தொகையான கடன் மீதிகளும், வேலை இடைநிறுத்தத்திற்குள்ளாகி 04 வருடங்களைக் கடந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 234,901 கடன் மீதிகளும் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்திலிருந்து சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 191,160 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 190,160 தொகையான கடன் மீதிகள் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்டது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-----------------------------------------------------------------

### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

-----------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் பூரணமற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.5.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உரிமைத் தன்மை ஏனைய நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் திணைக்களத்தினால் முறையற்ற வகையில் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு, அந்த மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (i) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| | 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி வெகுமதி நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | * நிதிப்பிரமாணம் 85(2)(ஆ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசிறைக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்காமல் வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. |
| | * நிதிப்பிரமாணம் 104(4) | திணைக்களத்தில் 02 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட நட்ட இழப்பு தொடர்பாக அந்த நட்ட இழப்பு ஏற்பட்ட தினம் முதல் மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| * நிதிப்பிரமாணம் 389(ஆ) | காசோலைகளை நேரடியாகக் கையளிக்கும் போது அது பெறப்பட்டமைக்கு அதன் இலக்கம், பணத்தின் அளவு, குறுக்குக் கோடிடப்பட்டதா இல்லையா, அதற்கு பணம் பெறக்கூடிய வங்கி, உறுதிச்சீட்டு இலக்கம் மற்றும் கையளிக்கப்பட்ட திகதி போன்ற விபரங்களை உள்ளடக்கிய ஆவணங்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| * நிதிப்பிரமாணம் 756 | 2014 திசெம்பர் 15 ஆந் திகதி வரையில் அல்லது அதற்கு முன்னர் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| * நிதிப்பிரமாணம் 1645(அ) | திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பான சம்பவக் குறிப்புப் பத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| * நிதிப்பிரமாணம் 1646 | திணைக்களத்தின் குழாம் வாகனம் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| * நிதிப்பிரமாணம் 1647(அ) | வாகனங்களுக்குரிய உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்குரிய பாதுகாப்பு தொடர்பாக வேறுபாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களின் போதும் அதனைக் கையேற்றமைக்கான குறிப்பொன்று வாகன சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் | வெகுமதி நிதியத்திலிருந்து மதுவரி உத்தியோகத்தர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கும் ஏனைய தரப்பினரிற்குரிய பரிசுளைச் செலுத்துவதற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல முறைமையொன்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

-------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமல் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 1912 இன் 08 ஆம் இலக்க மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தவறுகளை சமரசம் செய்தல் அல்லது கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம், அனுமதிச் சீட்டு அல்லது நுளைவுச் சீட்டு இரத்துச் செய்தல் அல்லது கைவிடுவதற்குப் பதிலாக அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவின் கீழ் பெறப்பட்ட சகல பணமும் மதுவரி நிதியத்திற்குச் செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் இணக்கக் கட்டணம் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற இணக்கக் கட்டண தண்டப்பண மதுவரி நிதியத்தில் வருமானமாக கணக்கீடு செய்யாமல் வருமானக் குறியீடு 20-03-02-99 என்ற ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை மாத்திரம் இவ்வாறு ஏனைய வருமானத்தின் கீழ் செலவு வைக்கப்பட்ட பணம் ரூபா 1,615,247 ஆக இருந்ததுடன் 2014 சனவரி முதல் ஆகஸ்ட் வரை ஏனைய மாதத்திற்காக ஏனைய வருமானத்தின் கீழ் செலவு வைக்கப்பட்ட தொகை கணக்காய்வின் போது தெளிவாக கண்டறிய முடியாதிருந்தது.

(ii) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் அதற்குரிய திருத்தங்களின் பிரகாரம் ஏதாவது நிறுவனமொன்றில் சேவை மற்றும் வழங்கல்களின் அடிப்படையில் பெறப்படுகின்ற வழங்கல் மற்றும் சேவைகளின் பெறுமதி காலாண்டிற்கு ரூபா 3 மில்லியன் அல்லது வருடமொன்றிற்கு ரூபா 12 மில்லியன் அல்லது அதற்கு மேற்படுமாயின் பெறுமதி சேர் வரிக்கு கட்டாயமாக பதிவு செய்திருக்க வேண்டிய போதிலும் திணைக்களம் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்திருக்கவில்லை.

## 3.8 வங்கிக் கணக்குகள் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடு

வங்கிக் கணக்கிற்கு நேரடியாகக் கிடைக்கின்ற பணம் இனங்காணப்பட்டு உரிய வருமானக் குறியீடுகளுக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியல் உள்ளவாறு ரூபா 40,548,665 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத வைப்பு மீதி காணப்பட்டதுடன் அதில் ரூபா 200,000 மீதியொன்று 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கம்பனியொன்றிலிருந்து 2008 யூலை 09 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை மதுவரி வருமானத்திற்காக திணைக்களத்திற்குக் கிடைத்த ரூபா 147,701,421 தொகை நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கு முடியும் வரையிலும் இலங்கை வங்கியின் மூன்று மாத வைப்பாக வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த வைப்பிற்குரிய வட்டி மேற்கூறப்பட்ட வங்கிக் கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கம்பனியின் வங்கிக் கணக்கில் செலவு வைப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறப்பட்ட வழக்கிற்காக 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், வழக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடிவடையாதிருந்ததுடன் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணத்திற்காக ரூபா 50 மில்லியனுக்குக் கிட்டிய வரிப் பணமொன்று மேற்கூறப்பட்ட கம்பனிக்கு இது வரை கிடைத்திருந்தது. அதன்படி மேலும் மேலும் இந்த தீர்ப்பு தாமதமாவதன் அடிப்படையில் கம்பனிக்கு வழக்கின் தீர்ப்பு பாதகமானதாக தீர்மானிக்கப்பட்ட போதிலும் வைப்பிற்குரிய வட்டி கம்பனிக்கு உரித்தாவதற்கு திட்டமிடும் வகையில் பாரியளவிலான வரியொன்றை உழைத்துக் கொள்வதற்கு கம்பனிக்கு அவகாசமளிக்கப்பட்டிருந்தது.

(ii) வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு அல்லது கம்பனிக்கு இந்த வைப்புப் பணத்தின் உரித்து தீர்மானிக்கப்படுவதுடன், அந்தப் பணம் உரித்தாகும் தரப்பினருக்கு இந்த வைப்புப் பணத்தின் வட்டியும் உரித்தாக வேண்டிய போதிலும், தற்போதும் அந்தப் பணத்தின் வட்டி கம்பனிக்கு உரித்தாவது இடமளிக்கப்பட்டதில், இந்த வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் இந்த வைப்புப் பணம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டியதாக தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தும் அதில் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பாரியளவிலான வட்டி வருமானமொன்றை அரசாங்கம் இழந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சிற்றுண்டிச்சாலைக்காக மதுவரி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக 2008 ஏப்ரல் 30 ஆந் திகதிய 902 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 13(2) ஆம் பிரிவின் படி நில அளவை வரைபடமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நில அளவை வரைபடம் மதுவரி அறிவித்தலின் தூர எல்லைக்கு முரணாக இருந்தமையின் காரணமாக, அனுமதிப் பத்திரம் வழங்குதல் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் அந்த அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளரினாலேயே தூர எல்லைக்கு முரணாகாத வகையில் திருத்தம் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதே திகதி கொண்ட வேறொரு நில அளவை வரைபடமொன்றை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு நில அளவையாளரினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஒரே நாளில் 2 நில அளவை வரைபடம் வெவ்வேறான தூர அளவு காண்பிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களம் அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட சிற்றுண்டிச்சாலை தொடர்பாக மதுவரி அனுமதிப்பத்திரம் வழங்கும் ஆரம்பம் முதல் பொதுமக்கள் எதிர்ப்பு அறிக்கையிடப்பட்டிருந்தமையால் அரசாங்க நில அளவையாளரின் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அதாவது 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி இந்த அனுமதிபத்திரத்தை இடைநிறுத்த வேண்டியேற்பட்டது.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கொழும்பு 08, எல்பிட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு மதுவரி நகர அலுவலகத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 775,000 தொகையான வாடகையின் அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தின் 4 ஆவது மாடியில் பதவி நிலை உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ வீடுகளாக திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உத்தியோகத்தரின் மாதாந்த சம்பளத்தில் 12.5 சதவீதம் அறவிடும் அடிப்படையில் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு வசிப்பதற்காக அரசாங்க வீடுகளே வழங்கப்படக்கூடியதாக இருந்த போதிலும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தின் ஒரு மாடி உத்தியோகபூர்வ வீட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது.

## 3.11 நட்டமும் இழப்பும்

மீளாய்வாண்டின் போது வாகன விபத்துத் தொடர்பாக ஏற்பட்ட நட்டம் ரூபா 1,091,810 ஆக இருந்ததுடன் ரூபா 763,304 தொகை காப்புறுதி நட்டஈடாக கிடைத்திருந்தது. ரூபா 328,506 தொகையான எஞ்சிய நட்டத்தினை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின்படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்படுகின்ற சகல சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மது வரி வெகுமதி நிதியத்திலிருந்து தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 14,123,123 தொகை திணைக்களத்தின் வருடாந்த கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூன்று தனியார் கம்பனியிலிருந்து மதுவரி நிலுவை வருமானமாக முறையே ரூபா 311,828,527 தொகை, ரூபா 682,615,916 மற்றும் ரூபா 128,180,147 தொகை அறவிடப்படவேண்டி இருந்ததுடன் அந்த நிலுவை வருமானத்தை அறவிடல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தக் கம்பனியினால் நிலுவை வருமானம் செலுத்துதல் தொடர்பான திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உடன்படிக்கையின்படி தவணைப்பணம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தவணைப் பணம் வங்கி கட்டளையின் மூலம் அல்லது இலங்கையில் செல்லுபடியான பணத்தின் மூலம் செலுத்த வேண்டியமை உடன்படிக்கையின் 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட போதிலும் காசோலை மூலம் இந்த தவணைப் பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட 2 காசோலைகள் மதிப்பிழந்திருந்தன.

(iii) தவணைப் பணக் கொடுப்பனவு தாமதமான சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும் உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தவணைப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்ட திகதியாக காசோலை வைப்புச் செய்யப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

**3.13 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 37 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 380 | 311 | 69 |
| (iii) | இரண்டாம் நிலை | 860 | 586 | 274 |
| (iv) | ஆரம்ப நிலை | 169 | 122 | 47 |
| | மொத்தம் | 1,466 | 1,056 | 410 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 410 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.